செ.வெ.எண்.843 நாள்.16.11.09

## செய்தி வெளியீடு – 16.11.2009

## நீலகிரி மாவட்டத்தில் வீடுகளை இழந்தோர்க்குப் புதிய வீடுகள்! முதலமைச்சர் கலைஞர் ஆணை!

அண்மையில் நீலகிரி மாவட்டத்தில் பெய்த பெருமழையின் காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சேதமடைந்த வீடுகள் குறித்த கணக்கெடுப்பு நடைபெற்று வருகின்றது.

இதுவரை நீலகிரி மாவட்டத்தில் 1,869 வீடுகள் நிலச்சரிவின் காரணமாக முழுவதுமாகவோ, பகுதியாகவோ சேதமடைந்துள்ளதாகக் கணக்கெடுக்கப் பட்டுள்ளது. சேதமடைந்த வீடுகளைப் புதிதாகக் கட்டுவது மற்றும் தற்காலிக வீடுகள் கட்டுவது குறித்து இன்று (16.11.2009) முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின், தலைமைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், வருவாய் நிர்வாக ஆணையர், வருவாய்த்துறைச் செயலாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முழுவதுமாக சேதமடைந்த வீடுகள் அனைத்தையும் மாற்றி, புதிய வீடுகள் கட்டுவதற்கு சுமார் ஆறு மாத காலம் ஆகும் என்பதால், உடனடியாக தற்காலிக வீடுகள் கட்டித் தருவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் தற்காலிக வீடுகள் ஒவ்வொன்றிற்கும் சுமார் 70 ஆயிரம் ரூபாய் செலவாகும். இந்தத் தற்காலிக வீடுகள் 15 நாட்களுக்குள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுவிடும். தற்பொழுது முகாம்களில் தங்கியுள்ள முழுவதுமாக வீடுகளை இழந்த குடும்பங்களை அந்த வீடுகளில் உடனடியாக குடியமர்த்த போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்றும்; ஆறு மாதத்திற்குப் பிறகு புதிய வீடுகள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

* * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.